


அமரர் ஆறுமுகம் இராசநாயகம்

அவர்களின்

# நினைவுக் காணிக்கை

07.12.2020

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும்

வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் ஆறுமுகம் இராசநாயகம்

அவர்களின்

# நினைவுக் காணிக்கை

07.12.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# சமர்ப்பணம்

எமக்கெல்லாம் வழிகாட்டி, அன்பு காட்டி,
ஆதரவளித்து, எமது வாழ்விற்கு
ஒளியேற்றி வையத்துள் வாழ்வாங்கு
வாழ வைத்த எமது குடும்பத் தலைவர்
எம் இதயத்தில் நீங்கா இடம் கொண்ட
எமது பாசமிகு குடும்பத்தலைவர் அமரர்
உயர்திரு ஆறுமுக உபாத்தியாயர் இராசநாயகம்
அவர்களின் பாதக் கமலங்களில்
பக்தியுடனும் அன்புடனும் அஞ்சலி செய்து
இம் மலரை சமர்ப்பணம் செய்கின்றோம்.
ஓம் சாந்தி!

***பேரன்புடன்***
***மனைவி, பிள்ளைகள்,***
***மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்

எமது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது எமது உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் எல்லோர்க்கும் வழிகாட்டியாக இருந்து வாழ்க்கைமுறை நெறிகளை கடைப்பிடித்து வாழ்ந்த எம் குடும்பத் தலைவரே! தங்கள் இழப்பு எமக்கு ஈடு செய்யமுடியாத ஒன்றாக அமைந்துள்ளது.

தங்களிடம் நாம் பயின்ற வாழ்க்கை பாடம் எம் எதிர்கால வாழ்விற்கு ஒரு கலங்கரை விளக்காக அமையும் என்பதில் ஐயமில்லை. தங்கள் வாழ்வியல் முறையைப் பிற்பற்றி தங்கள் பணிகளையும் தொடர்ந்து நடாத்தி தங்கள் நற்பெயரை மேன்மையுறச் செய்வோம். இவையனைத் தையும் தொடர்ந்து பேண தாங்கள் காட்டிய வழிமுறைகள் உதவும். எமது எண்ணங்கள் செயல்கள் எல்லாம் நிறைவேற தங்கள் ஆசிகளை என்றென்றும் வேண்டி நிற்பதுடன் தங்கள் ஆத்மசாந்திக்கு என்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மனைவி, பிள்ளைகள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு: 02.10.1939

உதிர்வு: 08.11.2020

# அமரர்
# ஆறுமுகம் இராசநாயகம்

## அவர்களின்

## திதி வெண்பா

சார்வரிவருஷமதில் காரூர்ந்து முளைதளைகால் ஐப்பசியில்

சீர்நிறை அபரபக்க சப்தமியில் – பேராளன்

ஆறுமுகம் இராசநாயகம் ஆண்டவன் கழலடைந்த

ஞாயிறும் சேர்ந்ததே நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்பால் வெண்ணீறும்,
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன்கண்கள்குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை
தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெல்லாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயிலேறிவிளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலமமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஆறுமுகம் இராசநாயகம் அவர்களின் வாழ்க்கைப் பாதை

## பிறப்பு

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்*
*உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டிய பெருமகன் அமரர் ஆறுமுகம் இராசநாயகம் அவர்கள்.

நீர்வேலி மத்தியில் சைவ வேளார் பரம்பரையில் அன்பும் அறமும் உடையதாய தம்பதியர், ஆறுமுக வாத்தியார் என்று அன்புடன் அழைக்கப்படுபவரான அமரர்கள் கந்தையா ஆறுமுகம் நாகம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனாக 02.10.1939ம் திகதி பிறந்தார். இவரது உடன் பிறப்புக்களாக அமரர் நமசிவாயம் செல்வராணி மற்றும், சபாநாயகம், குலேந்திரநாயகம் ஆகியோர் பிறந்தனர்.

வளரும் பயிரை முளையில் தெரியும், வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்பது போல் சிறுவயதிலேயே தனக்கென்று ஒரு வாழ்க்கை முறையை அமைத்து வாழ்ந்தார். இறைபக்தி, ஆலயத் தொண்டு, ஆசிரியப்பணி என ஆறுமுக உபாத்தியார் மேற்கொண்ட பணிக்கு சிறுவயதிலிருந்தே பக்கபலமாக செயற்பட்டார். அந்த அடித்தளப் பணிகளை இவர் இறுதிக் காலம் வரை வழுவாது செய்து வந்தமையை நாம் காணக் கூடியதாக இருந்தது.

## கல்வி

இவர் தனது கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்று ஒழுங்குடன் ஒழுக்கம் பேணும் ஓர் நல்மாணவராக திகழ்ந்தார். இவர் படிக்கும் காலத்தில் கல்வியுடன் விளையாட்டிலும் பங்கு கொண்டார். சிறகுப்பந்தாட்டத்தில் (Badminton) சிறந்த வீரராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்

பாடசாலைக் கல்வியை சீருற முடித்த இவருக்கு இலங்கை வங்கியில் பணியாற்றுவதற்கான நியமனம் கிடைத்தது. முதல் நியமனமாக கொழும்பில் தனது பணியை ஆரம்பித்து தொடர்ந்து குருநாகல், கிளிநொச்சி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் பணியாற்றி வங்கி முகாமையாளராக பதவி உயர்வு பெற்று நற்பணிகளை செய்து வந்தார்.

வங்கியாளராக பணிபுரிந்த இவரை அன்புடன் Banker இராசநாயகம் என்றே எல்லோரும் அழைப்பார்கள். வங்கியில் பணி யாற்றிக் கொண்டிருந்த இவர் தந்தையாருக்கு உதவியாக விவசாய பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். இறுதிக் காலம் வரை இவர் விவசாயப் பணியை மேற்கொண்டு வந்தமையை காணக் கூடியதாக இருந்தது.

## திருமணம்

குருநாகல் பிரதேசத்தில் வங்கி பணியாளராக பணியாற்றி தன் பிரம்மச்சாரிய நெறி முறைகளை பின்பற்றி வந்த இவரை இல்வாழ்க் கையில் இணைப்பதற்கு குடும்பத்தினர் முடிவு செய்து அச்சுவேலியை சேர்ந்த சிவராசா முத்தம்மா தம்பதிகளின் மூத்த மகளான யோகலெட்சுமி (சுசீலாதேவி) அவர்களை திருமணபந்தத்தில் இணைத்து வைத்தனர். சாந்த சொரூபியாகிய அம்மையார் அவர்கள் இவரது இல்வாழ்க்கையில் பின்துணையாக நின்று செயற்பட்டார்.

## குடும்பம்

இவர்கள் தயாபரன், தயானந்தி, பராபரன் என்ற மூன்று பிள்ளைகளை பெற்றெடுத்து சீரும் சிறப்புமாக ஒழுக்கம், ஒற்றுமை என்பன ஒருங்கே அமையப் பெற்றவர்களாக வளர்த்தனர்.

இவர்களில் மூத்த மகன் தயாபரன் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகின்றார். இவர் கைதடியை சேர்ந்த செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசேஸ்வரி தம்பதியினரின் புதல்வியான சர்மிளாவை திருமணம் புரிந்து தனஞ்செயன், இந்துஜா என்ற இரு பிள்ளைகளுடன் நலமே வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் மகன் தனஞ்செயன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவராக மேற்படிப்பை மேற்கொண்டு வருகின்றார். மகள் இந்துஜா யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்று வருகிறார்.

மகள் தயானந்தி கந்தர்மடம் உடையார் வீதியை சேர்ந்த சரவணமுத்து நீலாதாட்சி தம்பதியினரின் புதல்வன் டாக்டர் திவாகரனை (வைத்தியர் களுபோவலை வைத்தியசாலை) கரம் பற்றி நித்தியா, கார்த்திகா ஆகிய பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் மூத்த மகள் நித்தியா பங்களாதேசில் மருத்துவம் பயின்று வருவதோடு இளைய மகளான கார்த்திகா கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் மருத்துவபீட மாணவியாக மேற்படிப்பை மேற்கொண்டு வருகின்றார்.

இளைய மகன் பராபரன் விவசாய உற்பத்தி மையம் உரும்பிராயில் பணியாற்றி கொண்டிருக்கிறார். இவர் உரும்பிராய் கிழக்கை சேர்ந்த கனகரத்தினம் விமலாதேவி தம்பதியினரின் புதல்வியான விஜயலதாவை திருமணம் புரிந்து லக்ஷிகா, சாகித்தியா, கார்த்தீபன் ஆகியோரை பிள்ளைகளாக பெற்று இனிதே வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் புதல்விகளாக லக்ஷிகா, சாகித்தியா யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று வருவதோடு இளைய மகன் கார்த்தீபன் கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றார்.

இவர்கள் எல்லோரும் ஒரு கூட்டுக்குடும்பமாக அமரர் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் ஒருங்கிணைந்து வாழும் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

## பணிகளும் சேவைகளும்

இறைபணிக்கென தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் அமரர் அவர்கள். நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் மேலும், நீர்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசுவாமியார் மேலும் மிகுந்த பக்தியுடைய அடியாராக ஆலய நிர்வாகப் பொறுப்புக்களில் பெரும்பங்காற்றியவர்.

தீர்க்கமான ஆலோசனைகள் வழங்கல், திட்டங்களை நெறி முறைகளுடன் செயற்படுத்தல் என்பன இவரது உடலுடன் ஒட்டிய பாங்காகும். பிறந்த ஊர் ஆலயங்களுடன் புகுந்த ஊர் ஆலயமான அச்சுவேலி உலவிக்குளப் பிள்ளையார் ஆலயத்திலும் ஆவணிச்சதுர்த்தி, மணவாளக்கோலம் போன்ற உபயப் பணிகளை தவறாது செய்து வந்தார்.

ஆலயங்களில் நிர்வாக நடைமுறைகள், வரவு செலவு கணக்கு முறைகள் பேணுவதற்கான வழிமுறைகள் என்பவற்றை சீருடன் நடாத்துவதற்கு உதவிக்கரமாக நின்று பணியாற்றினார்.

நீர்வைக் கந்தன் ஆலய வரலாறு, தோத்திரப்பாடல் அடங்கிய சிறப்பு மலர் ஒன்று இவரால் வெளியீடு செய்யப்பட்டது. திருவெம்பாவை படிப்பு, பிள்ளையார் கதை காலத்தில் படிப்பு செய்வதுடன் கந்தபுராண படிப்பு, சூரவன்மன் வதை படல படிப்பு என்பவற்றில் தவறாது பங்கு கொண்டு தனது பங்களிப்பை திறனுடன் செய்து வந்தார்.

நீர்வேலி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை கண்ணெனக் கொண்டு நீர்வேலி நலன்பேணும் சங்கமாக, கனடாவில் நீர்வேலி மக்களாலும் நலன் விரும்பிகளாலும் நடாத்தப்பட்டு வரும் நீர்வேலி நலன்புரிச்சங்கம் கனடா அமைப்பின் ஆரம்ப காலம் முதலே நீர்வேலி செயற்பாட்டு குழுவின் தலைவராக இருந்து பாடசாலையில் கல்வி கற்கும் உதவி தேவையான பிள்ளைகள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை தெரிவு செய்து அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு சேவை புரிந்து வந்தார்.

நீர்வேலி பாடசாலைகளின் வளப்பற்றாக்குறைகளை அறிந்து தீர்ப்பதற்கும், பாடசாலைகளின் விழா நிகழ்வு காலங்களிலும் கனடா சங்கத்தினருடன் தொடர்பு கொண்டு நிதி வசதிகளைப் பெற்று வழங்கி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வங்கி பணியாளர் சங்க நிர்வாக அங்கத்தவராக பல வருடங்கள் பணியாற்றியதுடன் இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் பொறுப்பான நிர்வாக பதவியிலிருந்து அமரத்துவம் அடையும் வரை தன் பணியை செவ்வனே நிறைவேற்றி வந்தார்.

## சுபாவம்

நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, திரிகரண சுத்தி, அமைதியான புன்சிரிப்பு, உயர் பண்புக்குரிய ஆடை அணிகள் என்றும் நெற்றியில் திரிபுண்டர குறி என்பன இவரது பண்பை அடையாளப் படுத்தும் குறிகாட்டிகள்.

நேரம் தவறாமை இவரது உடன் பிறந்த குணம் என்றே சொல்ல வேண்டும். தன் குடும்பத்திற்கு மட்டுமல்லாது இவரது உறவுகள் சார்ந்த அனைத்து குடும்பத்தினருக்கும் ஒரு வழிகாட்டியாகவும் அவர்களது நிகழ்வுகளிலே தலைமைத்துவமேற்று திறனுடன் நிறைவு பெறச் செய்த பெருமகன் மற்றவர்கள் பார்த்து பின்பற்ற வேண்டிய பண்பாளர் இவர்.

## நிறைவும் வேண்டுதலும்

ஒரு பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி அதிலே ஒரு பை இருக்கும். மெதுவான வண்டி ஓட்டத்துடன் வீதி உலா வந்த இராசநாயகம் அண்ணை மக்கள் நினைவில் என்றும் அகலாதவர்.

அவர் அமரத்துவம் அடைந்தாலும் இன்றும் மக்களிடையே நடமாடிக் கொண்டிருப்பது போன்றதோர் உணர்வே ஏற்படுகிறது.

அமரர் அவர்களின் இழப்பு இவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே ஓர் பேரிழப்பாகும். ஈடு செய்ய முடியாத இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆண்டவன் அருள் புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் கழலடைந்த கனவான்

கந்தப் பெருமானை தனது சொந்தப் பெருமானாக வழிபட்ட வரும், எமது தந்தையார் அமரர் இராஜேந்திரக் குருக்களின் அன்புக்குரிய வருமானஅமரர் ஆறுமுகம் இராசநாயகம் அவர்கள் காலமான செய்தி அறிந்து கவலை கொண்டோம். எமது தந்தையாருடன் இணைந்து ஆலயசமயக் கிரியைகளின் போது ஒரு அந்தணருக்கு சமமாக நின்று கரும மாற்றியவர். அதே போன்று என் மீதும் மதிப்பும், அன்பும் வைத்து ஆலயப்பணிகளை ஆற்ற உதவிகள் செய்ததுடன் ஆலோசனைகளும் வழங்குவார்.

பிள்ளையார் கதைப்படித்தல், திருவெம்பாவை படிப்பு என்பவற்றில் பங்கு கொண்டு காலம் தவறாது வருகை தந்து தன் பணியை ஆற்றுவார். நீர்வேலிக் கந்தன் தோத்திர பாமாலை என்ற நூலை வெளியீடு செய்துள்ளார். பரிபாலன சபையில் அங்கம் வகித்து நிர்வாக ஒழுங்குகள் சீருடன் நடைபெற உதவியதுடன் ஆலய கணக்கு வழக்கு முறைகளை பொருளாளர்களுடன் இணைத்து நல்ல முறையில் பேணுவதற்கு உதவி புரிந்து வந்தார்.

ஆலயப் பணிகள் மட்டுமல்லாது சமூக அறப்பணிகள் பாடசாலைகளின் மேம்பாடு, மாணவர்களின் கல்வி மேம்பாடு போன்ற பணிகளில் ஈடுபட்டு பன்முக தோற்றங்களுடன் தன் வாழ்வை பகிர்ந்து கொண்டார்.

இவரின் இழப்பு இடைவெளியை நிரப்புவது என்பது கடினமான ஒன்றாகும் கந்தன் கழலடைந்த இவர் ஆத்மசாந்திக்கு பிரார்த்திப்பதோடு இழப்பால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!


**இராஜேந்திரக்குருக்கள் சுவாமிநாதக்குருக்கள்,**
கந்தசாமி தேவஸ்தானம்,
நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற திருவாசக முற்றோதலின் போது



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற திருவெண்பாவை ஓதலின் போது



அச்சுவேலி உலவிக்குளப் பிள்ளையாரின் மணவாளக்கோல உற்சவத்தின் ஊஞ்சல்ப் பாடல் பாடும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை உரை

அமரர் ஆறுமுகம் இராசநாயகம் அவர்களை பல வருடங்களாக அறிவோம். இறைபக்தி, குருபக்தி, ஒழுக்கம், பண்புமிக்க பெரியார். கல்வியில் சிறந்து விளங்கி அரச வங்கி அதிகாரியாக பணிபுரிந்து திறமையினால் வங்கி முகாமையாளராக பணிபுரிந்தார். உரிய காலத்தில் ஓய்வு பெற்றார். இல்லறத்தில் நல்லறம் கண்ட பண்பாளர்.

நன்மக்கள் மூவரைப் பெற்ற பெருமை உடையவர். ஒரே மகளை வைத்திய கலாநிதிக்கு திருமணம் செய்து வைத்து மகிழ்வடைந்தார். நலன்புரிச்சங்கம் கனடா அமைப்பின் தலைவராக இருந்து பல சமூகப் பணிகளை ஆற்றியுள்ளார். வீண் ஆடம்பரம் ஆரவாரம் இன்றி தொண்டு செய்த மாமனிதர். குடத்துள் விளக்காகவும் இலைமறை காயாகவும் இருந்து பணியாற்றிய பெரியார் இன்று குன்றில் இட்ட தீபமாகி விட்டார்.

அமரர் அவர்கள் ஆற்றி வந்த பணிகளை தடையின்றி தொடர்ந்து செய்வதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக. அவர்தம் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சா. சோமதேவக்குருக்கள்**
அரசகேசரிப்பிள்ளையார் கோவில்,
நீர்வேலி.

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.
– அப்துல்கலாம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வைக் கந்தன் திருமலரடிகளில் சாந்தி காண்க!

திருவாளர். அமரர் ஆ.இராசநாயகம் அவர்களை பல்லாண்டு களாக நாம் நன்கறிவோம். மிகுந்த பண்பு மிக்க குடும்பத்தில் தோன்றிய அவர்கள் கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் பக்தியிலும் சிறந்து விளங்கியவர். வங்கி முகாமையாளராக உயர் பதவி வகித்த காலங்களிலும் இளைப்பாறிய பின்பும் இயன்ற அளவு பிறருக்கு உதவும் நல்லுள்ள முடையவராக காணப்பட்டார்.

தம் குல தெய்வமான நீர்வைக் கந்தப் பெருமானிடம் மாறாத பக்தியுடன் பற்பல பணிகளையும் செய்து வந்தவர். திருமுறைகளை பாடுவதிலும் புராணபடனம் செய்வதிலும் ஆர்வமுடன் ஈடுபட்டவர்.

அது போலவே, புலம்பெயர் உறவுகளுடன் நல்லுறவு கொண்டு அவர்கள் வழி உதவிகளையும் உரிய வகையில் பெற்று உண்மையு ணர்வுடன் பற்பல சமூக - சமயப் பணிகளையும் செய்து வந்தவர்.

எப்பொழுதும் திருநீற்றுப் பொலிவுடன் உற்சாகமான இளைஞர் போல, துவிச்சக்கர வண்டியில் ஊரைச் சுற்றி வலம் வந்தவர். அண்மைக் காலத்தில் சற்றே நோயுற்ற போதும், நம் வழிபடு தெய்வமான நீர்வை கதிர்காமம் வந்து வழிபாடாற்றிச் சென்றவர்.

அவரது ஆத்மா கந்தவேள் திருமலரடிகளில் நித்ய சாந்தி காண பிரார்த்திப்பதுடன், அவரது குடும்பத்தாருக்கு எம் ஆழ்ந்த அனுதா பங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வை மணி

**பிரம்மஸ்ரீ. கு.தியாகராஜர் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்
கலவன் பாடசாலையின்
இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு
நிகழ்வின் போது



நீர்வேலி கந்தசுவாமி கோயில்
திருத்தல வரலாறு தோத்திரப்
பாமாலை நூல் வெளியீட்டின் போது



நீர்வேலி பாலர் பகல்விடுதி பரிசளிப்பு
தினவிழாவில் சிறுவர்களுக்கு
பரிசில் வழங்கி பாராட்டிய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் மல்க நினைவுகளைத் தருகின்றோம்

பக்தியால் பணி செய்து, நித்தமுமே புன்சிரிப்பு, நீங்கா அன்பு, நிறைந்த தெளிவு, ஞானம், நேர்மை, பொறுமை, கடமை, பொய்யாமை, சத்தியமே வாழ்வென்று வாழ்ந்து மறைந்தும் நாம் மறவாமல் எம்முடன் வாழ்ந்து கொண்டிருந்தவர் எங்கள் அத்தான் "எண்பது ஆண்டுகள் வாழ்ந்தவரை ஆயிரம் பிறை கண்டவர்" எனப் போற்றி பெருமைப்படும் மரபு ஒன்று தமிழர் மத்தியில் இருந்து வருகிறது. இதுவே இவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார் என்பதற்கு சான்று.

மைத்துனர்கள், மைத்துனிகளை மாண்புறவே மதித்து மெய் யன்பை எம் மீது மெய்ப்பித்து தாய் போல் தாய் நாடும் பிறந்த ஊரும் (நீர்வேலி) எவ்வளவு முக்கியம் என்பதை நீங்கள் உங்கள் பிள்ளைகளை வெளிநாடு அனுப்பாது அருகாமையிலே வைத்து வளர்த்ததன் அருமை, பெருமை, உங்கள் ஆன்மா உங்கள் புகழ் உடலை விட்டு நீத்த போது எம்மால் உணர முடிந்தது.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்கள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள் புடை சூழ நிகழ்ந்த இறுதிக்கிரியைகள் எமக்கு விழிப் புணர்வை தந்தது. நாம் ஒன்பது பேர் இருந்தும் இத்துயரில் பங்குபற்றி எமது மூத்த சகோதரிக்கு ஆறுதல் கொடுக்க முடியாமல் (கொரோனா) கடவுள் தடுத்து விட்டார். இது எமது கர்மவினை.

ஒன்றாக வாழ்ந்திட்ட அக்கால வாழ்வை எண்ணுகின்றோம். உண்மை அன்பை காணாமல் தவிக்கின்றோம். தொலைபேசியில் "ஹலோ..." என்ற இனிமைக் குரல் எங்கே? சுவையான விருந்தோம்பல் எங்கே? எங்கே?? என விடை தெரியாது விழிநீர் மல்க உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அன்பு மைத்துனர்கள், மைத்துனிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தநாள் ஞாபகம்.....

நீர்வைக் கந்தனின் அடியனாகிய உயர்திரு ஆறுமுக உபாத்தியாயர் மகன் இராசநாயகம் அவர்களின் இழப்பு அடியேனின் நீண்டநாள் நட்புக்கு ஆப்பு வைத்துவிட்டது.

1956ல் அடியேனின் திருமணம் நீர்வேலியில் நடைபெற்றபோது மேற்கூறிய இளைஞன் என்னை மாப்பிள்ளை கோலத்தில் பார்த்துள்ளான். இவ்வாறு நாட்கள் செல்ல ஒரு நாள் முருகப்பெருமான் தனது கந்தப்புராணத்தை படிக்க திருவருள் கூடியது. நான் அங்கு சென்று கிணற்றில் தண்ணீர் அள்ளித்தர கால் கழுவி விட்டு விநாயகர் வாசலில் நின்று தொழ, இவர் குருக்கள் ஐயாவுக்கு மாப்பிள்ளை வந்துவிட்டார் என்று கூறினார். அன்று வரை மாப்பிள்ளை என்று அழைக்காத எல்லோரும் அடியேனை மாப்பிள்ளை என்று பல்லாண்டுகாலம் அழைத்தார்கள்.

அமரர் ஐயா மாணவனாக இருந்த காலத்தில் மிகவும் அடக்க ஒழுக்கமாகவும் இறைபக்தி உள்ளவராகவும் ஆலயத்துக்கு வந்தார். புராணம் கேட்பதையும் வார வெள்ளிக்கிழமைகளில் சுவாமி வீதி வலம் வரும் போது கூட்டுப் பிரார்த்தனைகளிலும் பங்கேற்பார். அடியேன் நீர்வேலிக்கு புதியவர் என்றாலும் ஆலயத்தின் ஆறுமுகசுவாமி வாசலிலும், வசந்த மண்டபத்திலும் என்னைத் தேவாரம், பஞ்சபுராணம் ஆகியன படிக்க வற்புறுத்துவார்.

மாம்பழத் திருவிழாவில் அடியேன் நாரதர் வேடமிட்டு மாம்பழம் எடுத்துச் சென்று கைலாச வாகனத்தில் இருக்கும் சிவன் அம்மனுக்கு விநாயகர் முருகன் சபையில் சேர்க்க வைத்தார்.

தற்போது அடியேன் உடல் நலம் குன்றிய காலத்திலும் ஆசனத்தில் அமர வைத்து முருகப்பெருமானின் தேர் வீதி வரும் காட்சியை வர்ணனை செய்ய சந்தர்ப்பம் வழங்கி என்னை ஊன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலுடன் தனது மூத்த மகன் தயாபரன் இல்லத்திற்கு அழைத்து சென்று எனக்கு தேனீர் வழங்கி ஆசீர்வதித்தார்.

இன்று, அன்று பார்த்த இராசநாயகம் முருகன் திருவடி சேர்ந்தார். நாம் எதையும் இழக்கவில்லை. எதையோ இழந்துவிட்டதாக எண்ணி வருந்த வேண்டியதில்லை.

இவ் உலகில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் உடலை விட்டு உயிர் போகும். உயிர் அழிவில்லாத பொருள் எனவே அவரின் ஆன்மா முருகன் பாதத்தில் அமைதியாக இருக்க வேண்டும் என்று வாழ்த்தி வணங்குவோம்

## போற்றிப்பா

***சீரோங்கு சிறப்புமிகு சார்வரி வருஷம் கார்த்திகைத் திங்கள்***
***இருபத்தி இரண்டு (08.11.2020) ஐப்பசி மாத அபரபக்க ஸப்தமி திதியில்***
***பேரோங்கு உயர்திரு ஆறுமுக உபாத்தியாயர் இராசநாயகம் அவர்கள்***
***நீரோங்கு நீர்வை முருகன் பாதம் அடைந்தனனே.***

சைவஜோதி
உலக சைவப் பேரவை உறுப்பினர்.
**திரு. நா.சிதம்பரநாதர்**
அழகாபுரி நீர்வேலி,
தெற்கு நீர்வேலி.

நூல்களைக் கற்கலாம், சொற்பொழிவுகளைக் கேட்கலாம், பல மணி நேரம் தொடர்ந்து பேசலாம், ஆனாலும் அனுபவமே சிறந்த ஆசான். அதுவே உண்மையான கல்வி.
– விவேகானந்த சுவாமிகள்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஆறுமுகம் இராசநாயகம்.....

காலமகள் கண்பட்டால் பூக்களும் காய்ந்து சருகாகி உதிர்ந்து விடும். இது இயற்கையின் நியதி. அவ்வாறே ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்ற பொழுதே இறக்கின்ற திகதியையும் சுமந்தே பிறக்கின்றான். ஆனாலும் ஒவ்வொரு மனித வாழ்வும் ஒரே மாதிரி அமைவதில்லை. ஏற்றத் தாழ்வு, பெரியவன் சிறியவன், நல்லவன் கெட்டவன் என இந்த சமூகம் பிரித்துப் பார்க்கின்றது.

அந்த வகையில் நம்மோடு வாழ்ந்து அமரராகி விட்ட வங்கியாளன் அமரர் ஆறுமுகம் இராசநாயகம் இன்று நம்மோடு இல்லையென்றாலும் அன்னார் விட்டுச் சென்ற நினைவுகள் எமது மனதினில் நீங்கா இடம் பிடித்துள்ளது. காரணம் அவரிடம் காணப்பட்ட பொறுப்புணர்வு, நேர்மை, தியாக மனப்பான்மை, நீண்ட கால எமது சங்கத்திற்கான உழைப்பு என்பன எமது மனதில் பசுமரத்தாணியாக விதைத்து விட்டு சென்றுள்ளமையே...

அமரர் இராசநாயகம் அவர்களுடன் வங்கியில் பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. ஆயினும் எனது வங்கிப் பணி முடித்து ஓய்வூதியம் பெற்ற பின்னர் நான் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது செயலாளராக இருந்த அமரர் இராசநாயகம் அவர்களையே சபை மீண்டும் செயலாளராக ஏகமனதாக தெரிந்தெடுத்தது. அன்னார் நீண்ட காலமாக சற்றே ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் அப்பதவியில் இருந்ததான செய்தியையும் அன்றுதான் அவருடைய குணாம்சங்க ளையும் அறிந்து கொள்ள எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த அளவிற்கு ஓய்வு நிலை வங்கியாளர்கள் அன்னார் மீது கொண்ட பெரு மதிப்பும் அன்பும் என்னால் உணரக் கூடியதாக இருந்தது. அவ்வாறு அன்னாருக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்ற முழு உன்னத மனிதரை நான் அன்று கண்டேன்.

தனது பொறுப்பையும் பணியையும் தியாக உணர்வுடன் திறம்பட நடாத்தி வந்தார். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை அவன் கண்விடல்" எனும் வள்ளுவன் குறள் வழி வாழ்ந்து எல்லோர் மனதிலும் இடம்பிடித்தார். அதுமட்டுமல்ல வாழ்நாள் முழுவதும் ஒரு சைவ உணவு உட்கொள்ளும் மனிதராக கோடு போட்டு வாழ்ந்தவர். வெளியிடங்களில் சென்று வந்தாலும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் உத்தம மனிதர் இவர். அன்னாருக்கு வாழ்வின் இறுதிப்பொழுது நோய் கண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொழுது எல்லோர் மனதிலும் நோயிலிருந்து மீண்டு வருவார் என்ற நம்பிக்கையில் இருந்தோம்.

ஆயினும், எமது நம்பிக்கை முன்னால் வீசிய கடும் காற்றில் அன்னாரது ஆத்மா ஜோதி அணைந்து விட்ட செய்தியைத் தான் காலம் எமக்குத் தந்தது.

இவரிடம் பிடித்த மற்றொரு விடயம் அளவோடு பேசுவார். அன்னாருக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி எமது வங்கியாளர் நலன் புரிச்சங்கம் இன்று அன்னார் இடத்தை நிரப்ப முயற்சி எடுக்கின்ற பொழுது தான் எமது கஷ்டம் துல்லியமாக விளங்குகின்றது.

எது எவ்வாறாயினும் அன்னாரின் பிரிவுக்கு பின்னர் என்னதான் எடுத்து உரைத்தாலும் மாண்டவர் மீண்டதில்லை என்ற உண்மையை உணரும் பொழுது வார்த்தைகள் மௌனிக்கின்றன.

எனினும், அன்னாரது பிரிவால் துயர் உற்றிருக்கும் அன்னாரது துணைவியாரும், அவர் தம் பிள்ளைகளும், உறவினர்களும் இந்த மீளாத் துயரில் இருந்து விரைவில் மீண்டெழ இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு. இ.பிரேமராஜன்**
ஓய்வுநிலை பிரதான முகாமையாளர்,
பிராந்திய முகாமையாளர் (வன்னி, யாழ்ப்பாணம்),
தலைவர்,
வடமாகாண இலங்கை வங்கி நலன்புரிச் சங்கம்.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நீங்காத இராசா அண்ணை

# அமரர் ஆறுமுகம் இராசநாயகம்

*"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்"*

என்ற வள்ளுவர் குறளிற்கு பொருளாக பண்பான வாழ்வு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தவர் அமரர் ஆறுமுகம் இராசநாயகம் அவர்கள்.

இலங்கை வங்கியில் பணியாற்றிய இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தனது பணியை செவ்வனே செய்து சேவைக்கே சிறப்பைப் பெற்றுக் கொடுத்தவர். அதே சமயம் இவர் நீர்வேலி கந்தசாமி கோயில் பரிபாலனசபை தலைவராக ஆலயத்தின் வளர்ச்சிக்காக ஒப்பற்ற பணியாற்றினார்.

சிறு பராயம் முதல் நல்லொழுக்கம், தெய்வபக்தி, விருந்தோம்பல் போன்ற நற்பண்புகளுடன் வளர்ந்து சைவ பாரம்பரியங்களை பேணிக் காத்த ஓர் உன்னத மனிதர். இவரது கள்ளங்கபடமற்ற புன்சிரிப்பும் திருநீற்றுப் பூச்சும் கொண்ட அடையாள உருவம் என்றும் எம் மனதில் நிழலாக நிற்கின்றது.

நீர்வேலி நலன்புரிச்சங்கம் (கனடா) முதன்முதல் ஆரம்பிக் கப்பட்ட போது

*"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்"*

என்பதற்கமைய இவரிடமே தலைமைப்பொறுப்பு வழங்கப் பட்டது. அதன் பின்னர் இருபது வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் இரவு பகல் பாராது கடின உழைப்பை நாம் நினைவு கூறுதல் அவசியமானது. உதாரணமாக நீர்வேலியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிற்கும், நிர்வாக கட்டடத் திருத்த வேலைகளுக்காகவும் மாணவர்களுக்கும் உதவிகள் வழங்கவும் வேண்டும் போதெல்லாம் உடனடியாக நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளைப் பெற்றுக் கொடுத்தார். மேலும் இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிக ளையும் பெற்றுக் கொடுத்ததோடு ஆலயங்களின் அபிவிருத்திப் பணிக்கும் உதவிகளைப் பெற்றக்கொடுத்து நீர்வேலிக் கிராமத்தின் வளர்ச்சிக்காக இறுதி மூச்சுவரை அயராது உழைத்தமை குறிப்பிடத் தக்கது.

"இராசா அண்ணை" என எல்லோராலும் அன்பாக அழைக் கப்பட்ட அமரர் அவர்கள் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரது நிகழ்வுகளையெல்லாம் முன்நின்று நடாத்தி எல்லோரின் உள்ளத்திலும் நீங்காத இடம் பிடித்தவர். எங்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்து நம்மை வழி நடத்திய எம் அன்புக்குரிய உன்னத மனிதர் இப்போது நம் மத்தியில் இல்லையே என உணர்கையில் நெஞ்சம் கலங்குகின்றது.

அன்னாரது மறைவினால் ஆறாத் துயர் உற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நீர்வேலி நலன்புரிச்சங்கம்**
கனடா

இந்த உலகத்தை கெடுப்பது கைகட்டி வேடிக்கை பார்க்கும் நல்லவர்கள் தான்

– நெப்போலியன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MR.A.RASANAYAGAM, WORTHY OF ALL.

அறிவு, ஆக்கம், தொண்டு, மதிப்பிடமுடியாத மாணிக்கம், எங்கும் கடமை பணிவுடன், ஆற்றிய எம் பெருமகன் அன்னாரின் மனைவி, மக்கள் நலமே வாழ எம் பிரார்த்தனைகள்! வணக்கம்!

This is about a Gentleman A Retired Bank Officer, an Exemplar of High Water Mark and unique in many ways. He has played an important part in all social activities and much of great servant to the community. MAY GOD BLESS HIS SOUL AND HIS WIFE AND CHILDREN.

Our community and our religion have lost someone of honour and greatness. Much can be said of a human like Mr.Rasanayagam, a gentleman of simplicity and nobility. Our prayers to God for his Heavenly Bliss.

Much, more can be said of one like Mr.Rasanayagam, who in the hearts of many, clean, great and par excellent.

Mr. Rasanayagam now with God, is divine. OUR PRAYERS.

**Mr. T.N Punjaksharam**
Neervely.

Alexander's last words
Bury my body and keep my hands outside. so that the world knows "The man who won the world had nothing in hands when he left"

- Alexander-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி பாலர் பகல்விடுதியின்
வருடாந்த பரிசளிப்பு நிகழ்வின் போது



நீர்வைப் பொன்னையன்
அவர்களின் "பாஞ்சான்"
நூல் வெளியீட்டின் போது




நீர்வைப் பொன்னையன்
அவர்களின் "பாஞ்சான்"
நூல் வெளியீட்டின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி செய்கின்றோம்

எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய இராசநாயகம் அண்ணன் அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைந்தோம்.

நீர்வேலி நலன்புரிச்சங்கம் கனடா அமைப்பின் நீர்வேலி கிராம அபிவிருத்திக்கான செயற்பாட்டுக் குழுத் தலைவராக ஆரம்ப காலம் முதல் இருந்து செயற்பட்டு வந்தார்.

பாடசாலைகளின் தேவைகள் பற்றி கலந்துரையாடி கனடா சங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி நிறைவு செய்வதுடன் உரிய காலங்களில் பணிகள் நிறைவேற வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு எம்மையும் ஊக்கப்படுத்தி செயற்படுவார்.

இக்கட்டான சூழ்நிலைகளில் கூட ஆரம்ப வகுப்பு பிள்ளைகளின் மேம்பாட்டிற்காக விளையாட்டு முற்றங்களை அமைத்துக் கொடுத்தல், கட்டட வேலைகள் சீர் செய்து கொடுத்தல், தேவையான பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணம் வழங்கல், பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவித்திட்டம், புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஊக்குவிக்கும் முகமாக அன்பளிப்புக்கள் என்பவற்றையும் வழங்குவதற்கு காரண கர்த்தாவாக நின்று பணியாற்றினார்.

தலைமைத்துவ பண்பிற்கு ஏற்ற இவர் இன்று எம்மிடையே இல்லை என்பது பெரும் குறையாகும். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

நீர்வேலி நலன்புரிச்சங்கம்,
கனடா,
நீர்வேலி.

திரு. ஐ.சிவராசா
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்லூரியின் அபிமானி...

அமரர் ஆறுமுகம் இராசநாயகம் அவர்கள் எமது கல்லூரியின் உயர்வு குறித்துச் சிந்திப்பவர். வங்கித்துறையில் தொழில் வாண்மை பெற்றிருப்பினும் கல்வித்துறை பற்றிய ஆழமான அறிவு உடையவர். கனடா வாழ் பழைய மாணவர்களின் உதவிக்கான உறவுப் பாலமாகத் திகழ்ந்தவர். பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளுக்குமான பண உதவி உரிய நேரத்திலும் உரியவாறு சமர்ப்பிப்பதிலும் சமர்த்தர். வருடத் தொடக்கத்திலே தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகர ணங்கள் நிச்சயமாகக் கிடைக்கும். மீத்திறனுடைய மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக பண உதவி வழங்கி அவர்களை உற்சாகப் படுத்துவார். கல்லூரியின் அனைத்து நிகழ்வுகளிலும் உரிய நேரத்தில் கலந்து சிறப்பிப்பார்.

கனடாவாழ் உறவுகளின் வெளியீடான "வாழையடிவாழை" யில் எமது வாழ்த்துக்களும் இடம்பெற வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதுடன் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து ஆர்வத்துடன் கேட்டறிவார். ஆரோக்கியமில்லாத விமர்சனங்கள் தொடர்பாக இவருடன் கதைக்கும் போது ஓர் ஆசானாக இருந்து ஆறுதல் வழங்குவார். இவரிடம் பல நற்பண்புகளை நான் கண்டுள்ளேன். சிறந்த ஆசாரசீலராகவும், அமைதியான ஆழ்ந்தறிந்த உரையாடலாளராகவும், இரக்கசிந்தை மிகுந்தவராகவும் இருந்ததோடு உயர்விவசாயியாக வயல் செல்லும் காட்சி இன்னும் என் கண்ணில் நிழலாடுகின்றது.

*"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்து இவ்வுலகு"*

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க அமரரின் பிரிவைத் தாங்கிக் கொண்டு அவர்தம் ஆத்மா சாந்திக்காக கல்லூரிச் சமூகம் சார்பாக பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி !சாந்தி!! சாந்தி!!!

**திரு. கு.ரவிச்சந்திரன்**
அதிபர் - யா/அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி கனடா நலன்புரிச் சங்கத்தினால்
நீர்வேலி C.C.T.M பாடசாலைக்கு
வழங்கப்பட்ட சிறுவர் பூங்கா
திறப்புவிழாவின் போது

நீர்வேலி
அத்தியார் இந்துக் கல்லூரியின்
வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது





நீர்வேலி றோ.க.த பாடசாலைக்கு
நீர்வேலி கனடா நலன்புரிச்
சங்கத்தினால் வருடம் தோறும்
வழங்கப்படும் கற்றல் உபகரணங்கள்
வழங்கும் நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ நீர்வேலி றோ.க.த.க பாடசாலை

# இரங்கற் செய்தி

புலம் பெயர்ந்து கனடா நாட்டில் வாழும் நீர்வேலி உறவுகளால் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருவது நீர்வேலி நலன்புரிச்சங்கம் கனடா அமைப்பாகும்.

இவ்வமைப்பின் நீர்வேலிக் கிளையின் தலைவராக இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து சேவையாற்றி வந்தவர் அமரர் ஆறுமுகம் இராசநாயகம் ஆவார். இவருடைய காலப்பகுதியில் நீர்வேலிப் பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகள், முன்பள்ளிகள், ஏனைய சமூக அமைப்புக்களின் கல்வி கலாச்சார பௌதிகவளத் தேவைகளை இனங்கண்டு தாய்ச்சங்கத்தின் ஊடாக நிறைவு செய்தவராவார்.

அந்தவகையில் எமது பாடசாலையில் வசதி குறைந்த 11 மாணவர்களை இனங்கண்டு வருடந்தோறும் இவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி ஊக்குவித்தார். மேலும் பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக நடாத்தப்படும் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்புவிழா போன்றவற்றிற்கு வருடந்தோறும் நிதி அன்பளிப்புக்களை பெற்றுத்தந்தவராவார். அத்தோடு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான தளபாடத் தேவையை பூர்த்தி செய்து தந்துள்ளார். இவ்வாறான ஒருவரது இழப்பு எமது பாடசாலைச் சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

*"தோன்றின் புகழோடு தோன்றுக அஃது இல்லார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று"*

என்ற குறளுக்கமைய வாழ்ந்த அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர்

**திரு. சி.தர்மரத்தினம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ நீர்வேலி தெற்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை

# இரங்கல் செய்தி

எமது பாடசாலையின் நலன் விரும்பிகளில் ஒருவரும் கனடா நலன்புரிச்சங்கம் (நீர்வேலி கிளை) இன் தலைவரும் ஆன அமரர். ஆறுமுகம் இராசநாயகம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரம் அடைவதுடன் அன்னார் எமது பாடசாலைக்கு நீண்ட காலமாக பல செயற்திட்டங்களில் உதவி வருபவர். கனடா நலன்புரிச்சங்க செயற் பாடுகளான சிறுவர் விளையாட்டு முற்றம், வகுப்பறைகளுக்கு கம்பி, ஜன்னல் போட்டமை, சுற்றுவேலி அமைத்தமை, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் ஆண்டு தோறும் வழங்கி வருகின்றமை என்பவற்றை குறிப்பிடலாம்.

மேலும் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் வாடும் குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

PRINCIPAL
**MR. K. GOWRIHASAN**

நீங்கள் ஏழையாகப் பிறந்தால் அது உங்கள் தவறு அல்ல
ஆனால் நீங்கள் ஏழையாக இறந்தால் அது உங்கள் தவறு
– பில்கேட்ஸ்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மக்கள் வங்கி யாழ் பிரந்தியம் மற்றும்
ஓய்வூதியர் சங்கம் நிகழ்த்திய
சாதனை மாணவர்களுக்குரிய
கௌரவிப்பு விழாவின் போது

இலங்கை வங்கி ஓய்வூதியர்
சங்கத்தின் வருடாந்த கூட்டங்கள்
சிலவற்றின் பதிவுகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீர்வேலி – கனடா நலன்புரிச் சங்கக்
கிளையினால் தன்னார்வ
அங்கீகாரத்திற்காக கௌரவிக்கப்பட்ட போது



இலங்கை வங்கி ஓய்வூதியர்
சங்கத்தினரால் வழங்கப்பட்ட
கௌரவிப்பின் போது




ருக்மணி ஆனந்தவடிவேல் அவர்களை
கௌரவப்படுத்திய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலுக்கு துணைநின்ற கற்றறிந்தோன்

அமரர் ஆறுமுகம் இராசநாயகம் அவர்கள் வங்கி முகாமை யாளராகப் பணிபுரிந்த கற்றறிந்தவர் ஆவார். நீர்வேலி நலன்புரிச்சங்கம் - கனடா அமைப்பின் தலைவராக இருந்து நீர்வேலிக் கிராமத்திற்கு பல பொதுப்பணிகளை ஆற்றியுள்ளார். அந்த வரிசையில் எமது பாடசாலை மாணவர்களின் கற்றல் வசதி கருதி அவர்களுக்கான கற்றல் உபகர ணங்களை பெற்றுக் கொடுத்ததுடன் பாடசாலையில் சிறுவர் முற்றம் ஒன்றை அமைக்கவும் பெரும் பங்காற்றினார்.

அத்துடன் மிகவும் கஷ்டமான குடும்பங்களின் பிள்ளைகளின் கற்றலுக்கான உதவி நிதியினைப் பெறுவதற்கும் உதவியுள்ளார். இத்தகைய உதவிகள் மூலம் மாணவர்களின் அறிவு விருத்திக்கும், உடல் உள ஆரோக்கியத்திற்கும் துணைநின்றுள்ளார். இவ்வுலகில் நற்பண்பு மிக்க சமூக சேவையாளராக விளங்கிய அன்னாரின் சேவைகள் மறக்கக் கூடியவையல்ல. நன்றியுடன் நினைவு கூர்ந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு. சிவலிங்கம் ரதீஸ்குமார்**
அதிபர்
யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை

எவனொருவன் தனக்குத்தானே மனக்கட்டுப்பாடுகளை ஏற்படுத்து கின்றானோ, அவனே சுதந்திர மனிதனாவான்.
– விவேகானந்த சுவாமிகள்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராஜ சுவாமிகள் அருளிய

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

### குகமயம்

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை

### குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம!
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக !
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க!
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகளிரண்டும் கருணைவேல் காக்க!
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க!
பின்கையிரண்டும் பின்னவ ளிருக்க!
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்கக் காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க!
பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருத்தலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைகுற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்!
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிப்
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகத்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி பாமாலை

## கணபதி வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருவும் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருவ மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூங்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

மண்ணுலகத் தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதிற் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றுந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா தேவி அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெயவெனவே
சங்கரியுன்னைப் பாடி டுமே
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதி யானவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா 01

தண்டினி தேவி தஷினி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈஸ்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 02

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 03

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க் கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசினியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 04

திருமகளானாய் கலைமகளானாய்
மலைமகளானாய் துர்க் கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண் மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா 05

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 06

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க் கையளே
நாவுரை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதீ
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய ஜெய சைல புத்திரி பரஹ்ம
சாரிணி சந்திர கண்டி னியே
ஜெய ஜெய கூஷ்மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸீத்திதா ஸ்ரீநவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 08

**நவக்கிரக வழிபாடு**

| **நவக்கிரகங்கள்** | **நிறம்** | **பூசைக்கான பூக்கள்** | **தானியம்** |
|---|---|---|---|
| சூரியன் | சிவப்பு | செந்தாமரை | கோதுமை |
| சந்திரன் | வெள்ளை | வெள்ளரவி | நெல் |
| செவ்வாய் | சிவப்பு | செண்பகம் | துவரை |
| புதன் | பச்சை | வெண்காந்தள் | பயறு |
| வியாழன் | மஞ்சள் | முல்லை | கடலை |
| வெள்ளி | வெள்ளை | வெண்தாமரை | மொச்சை |
| சனி | கறுப்பு | கருங்குவளை | எள் |
| ராகு | நீலம் | மத்தாரை | உழுந்து |
| கேது | பலவர்ணம் | செவ்வல்லி | கொள்ளு |

இந்து மக்களுக்கு ஒரு கையேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மகாலட்சுமி அர்ச்சனை
# 108 போற்றி

| | | | |
|---|---|---|---|
| 1. | ஓம் | அன்புலெட்சுமி | போற்றி |
| 2. | ஓம் | அன்னலெட்சுமி | போற்றி |
| 3. | ஓம் | அமிர்தலெட்சுமி | போற்றி |
| 4. | ஓம் | அம்சலெட்சுமி | போற்றி |
| 5. | ஓம் | அருள்லெட்சுமி | போற்றி |
| 6. | ஓம் | அஷ்டலெட்சுமி | போற்றி |
| 7. | ஓம் | அழகுலெட்சுமி | போற்றி |
| 8. | ஓம் | ஆனந்தலெட்சுமி | போற்றி |
| 9. | ஓம் | ஆகமலெட்சுமி | போற்றி |
| 10. | ஓம் | ஆதிலெட்சுமி | போற்றி |
| 11. | ஓம் | ஆத்மலெட்சுமி | போற்றி |
| 12. | ஓம் | ஆளும்லெட்சுமி | போற்றி |
| 13. | ஓம் | இஷ்டலெட்சுமி | போற்றி |
| 14. | ஓம் | இதயலெட்சுமி | போற்றி |
| 15. | ஓம் | இன்பலெட்சுமி | போற்றி |
| 16. | ஓம் | ஈகைலெட்சுமி | போற்றி |
| 17. | ஓம் | உலகலெட்சுமி | போற்றி |
| 18. | ஓம் | உத்தமலெட்சுமி | போற்றி |
| 19. | ஓம் | எளியலெட்சுமி | போற்றி |
| 20. | ஓம் | ஏகாந்தலெட்சுமி | போற்றி |
| 21. | ஓம் | ஒளிலெட்சுமி | போற்றி |
| 22. | ஓம் | ஓங்காராலெட்சுமி | போற்றி |
| 23. | ஓம் | கருணைலெட்சுமி | போற்றி |
| 24. | ஓம் | கனகலெட்சுமி | போற்றி |
| 25. | ஓம் | கஜலெட்சுமி | போற்றி |
| 26. | ஓம் | கானலெட்சுமி | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 27. | ஓம் | கிரகலெட்சுமி | போற்றி |
| 28. | ஓம் | குணலெட்சுமி | போற்றி |
| 29. | ஓம் | குங்குமலெட்சுமி | போற்றி |
| 30. | ஓம் | குடும்பலெட்சுமி | போற்றி |
| 31. | ஓம் | குளிர்லெட்சுமி | போற்றி |
| 32. | ஓம் | கம்பீரலெட்சுமி | போற்றி |
| 33. | ஓம் | கேசவலெட்சுமி | போற்றி |
| 34. | ஓம் | கோவில்லெட்சுமி | போற்றி |
| 35. | ஓம் | கோவிந்தலெட்சுமி | போற்றி |
| 36. | ஓம் | கோமாதாலெட்சுமி | போற்றி |
| 37. | ஓம் | சர்வலெட்சுமி | போற்றி |
| 38. | ஓம் | சக்திலெட்சுமி | போற்றி |
| 39. | ஓம் | சக்ரலெட்சுமி | போற்றி |
| 40. | ஓம் | சத்தியலெட்சுமி | போற்றி |
| 41. | ஓம் | சங்குலெட்சுமி | போற்றி |
| 42. | ஓம் | சந்தானலெட்சுமி | போற்றி |
| 43. | ஓம் | சந்நிதிலெட்சுமி | போற்றி |
| 44. | ஓம் | சாந்தலெட்சுமி | போற்றி |
| 45. | ஓம் | சிங்காரலெட்சுமி | போற்றி |
| 46. | ஓம் | சீவலெட்சுமி | போற்றி |
| 47. | ஓம் | சீதாலெட்சுமி | போற்றி |
| 48. | ஓம் | சுப்புலெட்சுமி | போற்றி |
| 49. | ஓம் | சுந்தரலெட்சுமி | போற்றி |
| 50. | ஓம் | சூர்யலெட்சுமி | போற்றி |
| 51. | ஓம் | செல்வலெட்சுமி | போற்றி |
| 52. | ஓம் | செந்தாமரைலெட்சுமி | போற்றி |
| 53. | ஓம் | சொர்ணலெட்சுமி | போற்றி |
| 54. | ஓம் | சொருபலெட்சுமி | போற்றி |
| 55. | ஓம் | சௌந்தர்யலெட்சுமி | போற்றி |
| 56. | ஓம் | ஞானலெட்சுமி | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 57. | ஓம் | தங்கலெட்சுமி | போற்றி |
| 58. | ஓம் | தனலெட்சுமி | போற்றி |
| 59. | ஓம் | தான்யலெட்சுமி | போற்றி |
| 60. | ஓம் | திரிபுரலெட்சுமி | போற்றி |
| 61. | ஓம் | திருப்புகழ்லெட்சுமி | போற்றி |
| 62. | ஓம் | திலகலெட்சுமி | போற்றி |
| 63. | ஓம் | தீபலெட்சுமி | போற்றி |
| 64. | ஓம் | துளசிலெட்சுமி | போற்றி |
| 65. | ஓம் | துர்காலெட்சுமி | போற்றி |
| 66. | ஓம் | தூயலெட்சுமி | போற்றி |
| 67. | ஓம் | தெய்வலெட்சுமி | போற்றி |
| 68. | ஓம் | தேவலெட்சுமி | போற்றி |
| 69. | ஓம் | தைரியலெட்சுமி | போற்றி |
| 70. | ஓம் | பங்கயலெட்சுமி | போற்றி |
| 71. | ஓம் | பாக்யலெட்சுமி | போற்றி |
| 72. | ஓம் | பாற்கடல்லெட்சுமி | போற்றி |
| 73. | ஓம் | புண்ணியலெட்சுமி | போற்றி |
| 74. | ஓம் | பொருள்லெட்சுமி | போற்றி |
| 75. | ஓம் | பொன்னிறலெட்சுமி | போற்றி |
| 76. | ஓம் | போகலெட்சுமி | போற்றி |
| 77. | ஓம் | மங்களலெட்சுமி | போற்றி |
| 78. | ஓம் | மகாலெட்சுமி | போற்றி |
| 79. | ஓம் | மாதவலெட்சுமி | போற்றி |
| 80. | ஓம் | மாதாலெட்சுமி | போற்றி |
| 81. | ஓம் | மாங்கல்யலெட்சுமி | போற்றி |
| 82. | ஓம் | மாசிலாலெட்சுமி | போற்றி |
| 83. | ஓம் | முக்திலெட்சுமி | போற்றி |
| 84. | ஓம் | முத்துலெட்சுமி | போற்றி |
| 85. | ஓம் | மோகனலெட்சுமி | போற்றி |
| 86. | ஓம் | வரந்தரும்லெட்சுமி | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 87. | ஓம் | வரலெட்சுமி | போற்றி |
| 88. | ஓம் | வாழும்லெட்சுமி | போற்றி |
| 89. | ஓம் | விளக்குலெட்சுமி | போற்றி |
| 90. | ஓம் | விஜயலெட்சுமி | போற்றி |
| 91. | ஓம் | விஷ்ணுலெட்சுமி | போற்றி |
| 92. | ஓம் | வீட்டுலெட்சுமி | போற்றி |
| 93. | ஓம் | வீரலெட்சுமி | போற்றி |
| 94. | ஓம் | வெற்றிலெட்சுமி | போற்றி |
| 95. | ஓம் | வேங்கடலெட்சுமி | போற்றி |
| 96. | ஓம் | வைரலெட்சுமி | போற்றி |
| 97. | ஓம் | வைகுண்டலெட்சுமி | போற்றி |
| 98. | ஓம் | நாராயணலெட்சுமி | போற்றி |
| 99. | ஓம் | நாகலெட்சுமி | போற்றி |
| 100. | ஓம் | நித்தியலெட்சுமி | போற்றி |
| 101. | ஓம் | நீங்காதலெட்சுமி | போற்றி |
| 102. | ஓம் | ராமலெட்சுமி | போற்றி |
| 103. | ஓம் | ராஜலெட்சுமி | போற்றி |
| 104. | ஓம் | ஐஸ்வர்யலெட்சுமி | போற்றி |
| 105. | ஓம் | ஜெயலெட்சுமி | போற்றி |
| 106. | ஓம் | ஜீவலெட்சுமி | போற்றி |
| 107. | ஓம் | ஜோதிலெட்சுமி | போற்றி |
| 108. | ஓம் | ஸ்ரீலெட்சுமி | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரஸ்வதி

# சகலகலாவல்லி மாலை

### குமரகுருபரர் அருளியது

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ சகமேழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான்பித் தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே 02

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே 03

தூக்கும் பனுவற் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே 05

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்காய் ஏழு தாமறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே 06

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய் உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்தீம்பால் அமுதம் தெளிக்கம் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலாவல்லியே 07

சொல்விற் பனமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதென் றொருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே சகல கலாவல்லியே 08

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்ன நாணநடை
கற்கும் பாதம்புயத் தாயே சகல கலாவல்லியே 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடியுண்டேனும் விளம்பில் உன்போற்
கண்டகண்ட தெய்வம் முளதோ சகல கலாவல்லியே 10

முற்றும்

திருமணமான பெண் புகுந்த வீடு செல்லும் போது அங்கு விளக்கு ஏற்றச் சொல்லப்படுவது ஏனெனில் விளக்கின் ஐந்து முகங்களும் பெண்ணுக்கான ஐந்து இலக்கணங்களான பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, சமயோசித புத்தி, வைராக்கியம் என்பவற்றை குறிப்பதாகும். பொதுவாக விளக்கினை தானாக அணையவிடாமல் ஒரு பூவால் ஒற்றி அணைக்க வேண்டும். வாயால் ஊதியோ, கையால் விசிறியோ அணைக்கக் கூடாது.

–இந்து மக்களுக்கு ஒரு கையேடு –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணி துதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத்தில் இருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின்று ஒளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்து உட்பொருள் ஆவாள்

மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலை
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்
கோதகன்ற தொழில் உடைத்தாகி
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை உற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள்

அம்மா தாயே கலைவாணி - நீ உன்
நாவைக் காப்பாயே
இம்மா நிலத்தின் உதவியெல்லாம்
இருக்குதுன் நாவின் அசைவினிலே
சும்மா இருக்கத் தெரியாது
சுகத்தைச் சொன்னால் விளங்காது
தம்மாலென்றே தகிமாறும் இந்தத்
தரணியை ஆண்டிட வேண்டுமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்து சுன்னாகம் அ.வரத பண்டிதரவர்கள் இயற்றிய

# பிள்ளையார் கதை

### காப்பு

கரும்பு மிளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவும் மேன்மே - லருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்க ளோக்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமான்றா னீன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு

### விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடும் செஞ்சோற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை

ஒற்றை மருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதி லெப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா.

### சப்பாணி

எள்ளுப் பொரிதே னவலப்ப மிக்கும் பயறு மிளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப் படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி யருள்க சப்பாணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டப்பெருச்சா ளியேறிச் சடைகொண் டுவையத் துலாவி
அண்டத் தமரர் துதிக்க வடியார்க் கருளும் பிரானே
எண்டிக்கு மன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதிதம்பி கொடுங்கையாற் சப்பாணிகொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
மூவுல குந்தொழு தேத்துஞ்
செப்புக் கவித்த முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய்
சரஸ்வதி யெனும் திருவே
எக்கால முமுன்னைத் தொழுவே
னியலிசை நாடக மென்னும்
முத்தமிழ் கல்விக ளெல்லா
முழுது மெனக்கருள் செய்தென்
சித்தந் தனில்நீ யிருந்து
திருவருள் செய்திடுவாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிபறத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்துவளர் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்புஅரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளின்
மற்றவர் புரிய மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில்லை யென்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரி சாயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமையா ளுடைய உமையாண் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடு மானுடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவற்குநீ பிள்ளை யாகச்
சென்று அவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத்து அருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற்சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பின ளாகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுத றன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோர்க் அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான் என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யானெனக்
கருந்தட நெடுங்கண் கவுரி அங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல் தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல் உமை அருந்தவம் புரிதலும்
அரிவைதன் அருந்தவம் அறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மான் இடம் ஏந்தும் வண்ணம் ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையில்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறும் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங்கு இயற்றுவது என்றலும்
கொன்றை வார்சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீ செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர் குழலியை
வாடுதல் ஒழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடு அலர்கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் அணிமனை கொணர்கஎன
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ யெழுந் தருளென
மைம்மலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன் என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கெனச்
சிவனை இகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறினள் ஆகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற் கரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப
மலையிடை வந்த மாமுனி தன்னை
இணையடிதொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவமென்று அஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிழை தானும் அவனெதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தனென்றெண்ணி
ஆசனம் நல்கி யருக்கிய முதலாப்
பாதபூசனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுதுசெய் வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்துஇவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உகந்து முன்வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிதனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுரவங் காட்டி முன்நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங்கு அவன் அடி வீழ்ந்துஇறைஞ் சினனே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில் உள்ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல் அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல் வந்துஇலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறும் திருவிளக் கேற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடலென விளங்கும் காவணந் தன்னில்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்து உடன் இருத்திப்
பறையொ லியோடு பனிவளை யார்ப்ப
வதுவைக்கே ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலற் றொளிபொற் றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுஅணி கருங்குழற் பூவை தன்னுடனே
ஓதநீர் வேலிசூழ் உஞ்சையம் பதிபுக
ஏரார் வழியில் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென
வருங்கருங் குழலாள் மற்றும் உண் டோவெனத்
திருந்துஇழை மடந்தை திரும்பினாள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்துவிளை யாடல்கண்
டொளிர்மணிப்பூணாள் உரவோ னுடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம் அதாகிக்
கூடிய கலவியில் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமம் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக்கையோடு
ஐங்கர தலமு மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந் துவர்வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டும்
கோடி சூரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்த நான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்குஅவர் தங்கட்கு அருள் சுரந்துஅருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதுஇரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வான வராலும் மானு டராலும்
கானவர் கொடிய கடுவி லங்காலுங்
கருவி களாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர ழியாமல்
திரம்பெற மாதவஞ் செய்து முன்னாளில்
வரம் பெறுகின்ற வலிமை யினாலே
ஐம்முகச் சீயம்ஒத்து அடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந் தொழில்புரியுங் கொடுமை கண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலீர் என்றுஅவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனைமா முகத் தவுணனோடு டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா வென்று விடைகொ டுத்தருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைவெண் மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்த வன்வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்த்த மூடிகமாம் வந்தவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்த வெண்மருப்புஅங்கு இமைநொடி அளவில்
செறிந்தது மற்றுஅவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தலைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்துஆங்குஉயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிக் கயல்கமுகு ஏறும்
திருச்செங் காட்டிற் சிவனை அர்ச்சித்துக்
கணபதீச் சுரம் எனுங் காரண நாமம்
கணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்றுஇருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல் செய்திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென்றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெறுநாள்
ஒப்பரும் விரதத்துறும் ஒரு சதுர்த்தியில்
நோற்று நற்பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றி செய்திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருங் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத்திரமுந்
தாழ்துளைக் கையும் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றம் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத்தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும் எய்துவர் என்று அசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள் இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்.
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத்து உதித்த
தருமனும் இளைய தம்பி மார்களுந்
தேவகி மைந்தன் திருமுக நோக்கி
எண்ணிய விரதம் இடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண் டாகவுஞ்
செருவினில் எதிர்ந்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை வந்தனை
செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டாளி துதையும் பசுந்துளாய் மார்பனுங்
கேட்டருள் வீர் எனக் கிளர்த்துத லுற்றான்
அங்கு நீறணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வர் பரணமுந் தரிக்கப் பெற்றவன்
உறுமதிக் குழவிலோ லொருமருப் புடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையின் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்தி செய்வதனாற் சித்தி விநாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தரும்திரு நாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தி யாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தி யோகங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கவன் தன்னை அருச்சனை புரிந்தாற்
தீங்குஉறாது எல்லாஞ் செயம் உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதமொன்று உள்ளதை விரும்பி நோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியின் நினைத்த பொருள்கை கூடும்
மேலவர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசை செய்விதமும்
விரித்தெமக்கு உரைத்திட வேண்டுமென்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்க புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்தன்
ஒள்ளிய அருள்திரு உருவுண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலர் மண்ணால் அமைத்தலுந் தகுமால்
பூசைசெய் திடுமிடம் புனிதம தாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம் முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தம் சாத்திக் கணேச மந்திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும் மந்திரத்தான்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருதுமை கதனாப் புகலுமந் திரத்தாந்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன் இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்தன் ஈசுர புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னும் நாமங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகன் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியோடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன்வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும் மந்திரத்தால்
நிருந்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்ற நா னான்கு உப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்
குண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்த வத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகம் என நவில்றரு மரபால்
இம்முறை பூசனை யாவர் செய்தாலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரன் இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத் திராசுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன்தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாடமயந்தி
அன்னான் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேறறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகிரத னென்னும் பார்த்திவன் இவனை
மதிதலந் தன்னின் மலர்கொடர்ச்சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்ட தேவதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்மணி யென்னும் ஒண்டொடி தன்னைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டு போம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டு பாண்மிழற்றா மலர்கொடு அர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவனை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னிலெண்ணுதற்கரிதால்
அப்படி நீவிரும் அவனை யர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகன் றெறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்து கட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைற்ததை செகத்தினிற் செயங்கொண்
டந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
சங்கிது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற் றொன்று உரை செய்வாய்
கஞ்சநான் முகன் தரும் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தான் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திரவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமினீரென
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரவேல் விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊர் அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும் அச் சபையில் தரியாது ஏகி
எமைஆளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாலகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்று கையேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்க ஒண்ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையில் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆறு இரண்டுங் கரம் ஈராறுந்
தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண் அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுமீன் களைப்பால் அளித்தீர் என்றுஅனுப்ப
ஆங்கவர் முலையுண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருவலர் குழல் உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர் தம்படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேன் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன்றுஉதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடு என்றனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுபேர் பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமரவே லுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்ட ரெல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன் எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ் உமை யான்வென்றேன் என
எம்பெரு மானும் யான்வென்றேன் என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவருஞ் சாட்சியம் இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மாமுக நோக்கிக்
காமனை யெரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்*கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரி அங்குஉருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினில் ஒன்றால் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள் வீற்றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளவு அணி மருகனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டு அரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தணெட்டுட லெடுத்து
வளர்மருபபொன்றுடை வள்ளல் வீற்றிருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தீன்கீழ் இருந்தான்
கம்பாமாமுகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம் என
உம்பர் உலகத்து ஓர் ஏழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகைக் கழிந்தபின் னாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர் இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டு ஒரு மனமாய்
வேதத்தாகியும் பூமியில் எழுத்தும்
ஆதி விநாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றெழுத்து அதனால் மொழிந்த மந்திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகண் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றைநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாள் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும் அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடு விதானித்து
மலர்பல கொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிக்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருத்து மல்லிகை கொங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழ் இரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்பு செவ்வந்தி
வாய்ந்த நல்எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல் எள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனித்தேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோவாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும் நோற்பேன் என
ஆங்கு அவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடு இவ்விரதம் பரிந்து நோற்பித்தார்
அண்டர் நாயகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபம் நீங்கியது ஏதென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறைவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளை அன்று எனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொற்றாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுளை அடைந்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ் சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்தி நோற்பேனென
இறையவன் கதைசொல் வேந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புரிந்தோன்.
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுளுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்து கண்டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாதெனக்
தண்நறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயகன் விரதம் நோற்றுஅதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டு நீங்கியதும்,
பறிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததுங்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புரிந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடு இவ்விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ர மாதித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்ப புடனிவ் விரதம் நோற்பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சவநா ணோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச் சிறையிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் விரிவிழிக் கோதையைக்கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவட்கு அருள
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிர மாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புத் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல முடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப் பொழுதுஇவள் இங்கு இருக்க லாகாதுஎன
அயற் கடைஅவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்திரும்ப
மணியும் முத்தும் வலிய கல்லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர் தம்மனையில் உற்றவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய்தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லா நடுங்கவந்துஉதித்தாய்
சாலவும் பாவி நீ தான்யா ரென்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனுமாற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந் திருப்ப
அவ்வை செல்ல அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குன்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லு விக்கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகஎனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியுமுழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக்கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்தி நின்றாட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமி அவ்வை உணர்ந்து முன்அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
துவலரும் விநாயக நோன்பு நோற்றிடுகஎனக்
கரத்து மூவேழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம் பல பண்டமுஞ்
செப்ப மதாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரதத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணை பெற்றதற்பின்
சக்கிர வாள சைனி யத்தோடு
விக்ர மாதித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை யாங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க வெண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருள்எனச்
செப்பிய அன்னை மொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒரு பணிகாரமும்
பண்நேர் மொழியார் பார்த்ததிபற்குதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தான்அது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையை நோக்கி மனம்மிக மகிழ்ந்து
திங்கணேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி இருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னு நவமணியும் வந்துஅணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பனைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதனைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகுஇருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
காலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்புஎல்லா நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

திருச்சிற்றம்பலம்

பிள்ளையார் கதை முற்றுப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றித் திருவகவல்

அருள்புரிந் தருளு மரசே போற்றி
இருவினை துடைக்கு மிறைவா போற்றி
மறைமுனி யொருவன் மாங்கனி கொணர்ந்து
கடைமிடற் றிறைவன் கையில் கொடுப்ப
வேலுனு நீயும் விரும்முன் னிற்ப
வருநொடி யதனி லுலகெலாம் வலமாய்
ஒருமவர் தமக்கு வழங்குவோம் யாமென
விரைவுடன் மயின்மிசை வேலோன் வருமுனர்
அரனை வலம்வந் தக்கனி வாங்கிய
விரகுள விக்கின னிநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றி
பின்னடி தெரியாப் பெருங்கலிப் பெருமான்
மண்மிசை வைத்துனை வாவியிற் செல்லக்
கண்ணிலா னிவனெக் கரந்தவன் போகக்
கரைமிசை யேறிக் காணு திரங்கி
உரைதடு மாறி யுள்ளங் கலங்கிக்
கூகூ கணபதி கூகூ வெனக்
கூகூ வென்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புர மெரிக்க
இப்புவி யதனை யிரத மாக்கிக்
தினகரன் மதிதேர்ச் சில்லி யாகப்
பொருவரு மறைகளே புரவி யாகப்
கங்கைசேர் நான்முகன் சாரதி யாகப்
பங்கயக் கண்ணன் பகழி யாக
மலை சிலையாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கு நெடுந்தேர் தன்னில்
விக்கினந் தீர்க்கும் விநாயக நமவெனச்
சிக்கென விறைவன் செப்பா தேறலின்
தச்சுறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சறுத் தருளு மரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
கரமைந் துடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகில மீன்றரு ளம்மை தனக்குத்
திருமக னாகிய செல்வா போற்றி
அற்றதர்க் கருள்புரி யரசே போற்றி
கற்றவர் மனதிற் காண்பாய் போற்றி
பாசாங் குசங்கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநர கெழுபிறப் பறுப்பாய் போற்றி
எழுமையு மெமக்கிங் கிரங்குவாய் போற்றி
தளைசெறி வக்கிர துண்டா போற்றி
வளநிக ரொற்றை மருப்பா போற்றி
வரமிகு மரிதிரு மருகா போற்றி
சுரர்தொழு முருகன் துணைவா போற்றி
நல்லவர் புகழு நம்பா போற்றி
வல்லபைக் குரிய மணாளா போற்றி
கயமுகத் தவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமிகு மூஷிக வாகனா போற்றி
ஓங்கா ரத்தனி யுருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்கொரு துணைவா போற்றி
முறநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டமா மதிபோற் றுவங்கிய கோட்டைக்
கண்டக மாகக் கைதனிற் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக்கை கோவை

அன்புடைக் கடவுளர்க் கதிபதி செயசெய
ஆபத் தகற்று மைங்கர செயசெய
இந்துச் சடைமுடி யிறைவா செயசெய
ஈசன் பெற்ற எம்மான் செயசெய
உன்னிய முடிக்கு மொருவா செயசெய
எம்பெரு மானே யேகனே செயசெய
ஏழுல குந்தொழ விருப்பாய் செயசெய
ஐயா கணங்கட் காதீ செயசெய
ஒற்றை மருப்பை யுடையாய் செயசெய
ஓங்கிய கரிமுக முற்றாய் செயசெய
ஔவிய மில்லா தவனே செயசெய
அஃகர வணிந்த வாதீ செயசெய
கணமூன்றுடைய களிறே செயசெய
ஙப்போன் மழுவொன் றேந்தி செயசெய
சங்கரன் றெறச் சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பீ செயசெய
இ,டமுடை விக்கி னேசுரா செயசெய
இ,ணங்கிய வன்பர்க் கினியாய் செயசெய
தத்துவ முறைதரு சாமீ செயசெய
நன்னெறி வித்தக நம்பீ செயசெய
பகீரதிக் கினிய பாலா செயசெய
மன்று ளாடி மகனே செயசெய
இ,யக்கரைக் களையு மிறைவா செயசெய
அ, ரவவக் கிங்கிணி யணிவாய் செயசெய
இ, லகக் கொம்பொன் றேந்தீ செயசெய
வஞ்சனைப் பழவினை மாற்றுவாய் செயசெய
அ,ழகிய வேலனுக் கண்ணா செயசெய
இளமத யானை முகத்தாய் செயசெய
இ, றக்கரி சாடு மிறைவா செயசெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ,னந்த லாடு மரசெ செயசெய
கரமைந்துடைய கணபதி செயசெய
காமன் பகைவன் காதல செயசெய
கிரியிற் பாரதந் தீட்டினாய் செயசெய
கீழ்மை யொழித்தும் கிளர்வாய் செயசெய
குண்டப் பண்டிக் குருவே செயசெய
கூறிய மும்மதக் கோவே செயசெய
கெண்டயங் கண்ணுமை மகனே செயசெய
கேதா ரப்பிரிய மானாய் செயசெய
கையிற் சக்கர முடையாய் செயசெய
கொவ்வைக் கனிவாய், மதலாய் செயசெய
கோலக் குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்ப்பாய் செயசெய

**ஆலயத்தை வலம் வருதல்**

மூன்று முறை – விரும்பியகாரியம் நடைபெறும்
ஐந்து முறை – காரிய வெற்றி
ஏழுமுறை – நல்லகுணம், எண்ணம், அமைதி உண்டாகும்
ஒன்பது முறை – ஆயுள் விருத்தி உண்டாகும்
பண்ணிரண்டு முறை – உடல் வலிமை

ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அடிமேல் அடிவைத்து அடிப்பிரதட்சணம் செய்யலாம் பெண்கள் அங்கப் பிரதட்சணம் செய்யக்கூடாது. ஆண்கள் முட்டுக்காலில் நின்று வணங்குதல் கூடாது.

– இந்து மக்களுக்கு ஒரு கையேடு
அகில இலங்கை இந்து மாமன்றம்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவஞானத் திருவகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரதணத்
துரிமை சேர் அகவல் ஓதினார்
பொருளொடு தவமும் புகழும் பெறுவரே

**ஆவணிச்சதுர்த்தி**

ஆவணி மாதத்துப் பூர்வபக்க சதுர்த்தி விநாயகப்பெருமான் திருஅவதாரம் செய்த தினமாகையால் கிரிய வழிபாட்டிற்றும் விரதத்திர்பம் செய்தான். அன்றைய தினம் பகலில் உபவாசம் இருந்து ஆலய தரிசனம் செய்த பின் இரவில் கொழுக்கட்டை மோதகம் முதலியன விநாயகருக்கு நிவேகித்து உண்ணலாம். அன்றைய தினம் விநாயகருக்குரிய அறுகம்புல்லினால் அர்ச்சிப்பது அளவிருத்த பலனைக் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# விநாயக கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்கந் வாய்த்த சென்னி
அளவு படா வதிக சவுந்தரதேக
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரற நெற்றியை என்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவந்தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க
தடவிழிகள் பாலசந்திரனார் காக்க

கவின்வளரும் மதரங் கசமுகர் காக்க
தாலங் கணக்கிரீடர் காக்க
நவில் சிபுகங்கிரிசை சுதர் காக்க
நனி வாக்கை விநாயகர்தாங் காக்க
அவிர் நகை துன்முகர் காக்க வன்னெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிந்திதார்த்தர் காக்க

காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களங்கணேசர் காக்க
வாமமுறு இருதோளும் வயங்கு கந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாயகன்
காக்க இதயந்தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க
அகட்டினைத்துலங்கே ரம்பர் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமிரண்டையும் தராதரர் காக்கப்
பிருட்டத்தைப் பாவநீக்கும்
விக்கின கரன் காக்க விளங்கிலிங்கம்
வியாளபூடணர் தாங் காக்க
தக்க குய்யம்தன்னை வக்கிரதுண்டர்
காக்க சகனத்தை யல்லல்
உக்கணபன் காக்க ஊருவை
மங்களமூர்த்தி யுவந்து காக்க

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க
விருபத மேகதந்தர் காக்க
வாழ் கரங்ப் பிரப்பிரசாதனர் காக்க
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபூரகர் காக்க
விரல்பதுமவத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க

அக்கினியிற் சித்சீசர் காக்கவும்
புத்திரர் தென் ஆசைக்காக்க
மிக்க நிருதியிற் கணேசுரர் காக்க
விக்கின வர்த்தனர் மேற்கென்னுன்
திக்கதனிற் காக்கவா யுவிற்
கசகன்னன் காக்க திகழ் உதீசி
தக்க நிதிபன் காக்க
வடகிழக்கில் ஈசநந்தனரே காக்க

ஏகதந்தர் பகன்முழுதும் காக்க
விரவினுஞ் சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கினகிருது காக்க
இராக்கதர் பூதம் உறுவே தாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகினி பேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவிலாத வேகமுறு
பிணிபலவும் விலக்கு புபாசாங்குசர்
தாம் விரைந்து காக்க

மதி ஞானம் தவந்தான மான மொளி
புகழ்குலம் வண் சரீரமுற்றும்
பதிவான தனம்தானி யங்கிரக
மனைவி மைந்தர்பயி னட்பாதிச்
சாதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க
காமர் பவுத்திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேசர்
ரெஞ்ஞான்றும் விரும்பிக்காக்க

வென்றி சீவிதம் கபிலர் காக்க
கரியாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதினாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேகமாகி மன்னும்

**அபிஷேகத்திரவியங்கள்**

எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு மஞ்சட்காப்பு, பஞ்ச காப்பியம், ரசபஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கரும்பஞ்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, தமரக்கம் பலச்சாறு, இளநீர், சந்தனக் குழம்பு என்பவைகளாகும். இளநீர் முகிழைத்திறந்து தனித் தனி அபிஷேகம் பண்ணல் வேண்டும்.

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் - எங்கோன்
திருவாசக மென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏக ன்அனேகன் இறைவனடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவியார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தனியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குச்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தைபெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாய்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓவென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

***

**தானதருமம்**

ஒன்றாக இருப்பினும் தானம் என்பது வேறு தருமம் என்பது வேறு ஒரு பொருளை மனப்பூர்வமாக அதன் மீது பற்று வைக்காது பிறருக்கு அளிப்பது தானம் ஆகும். மனம் விரும்பி மற்றவர்களுக்காக செய்யப்படும் பணிகள் **தருமம்** ஆகும். தானம் கொடுப்பவர் கிழக்கு நோக்கி அமர்ந்து ரங்கல்பம் செய்து, தனது பெயர் கோத்திரம் முதலிய விபரங்களை கூறி அந்த தானத்தை ஒரு பாத்திரத்திற்கு/ உத்தமமானவனுக்கு அளிக்க வேண்டும்.

– ஸ்ரீ கருட புராணம்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பெருந்துறையில் பாடியருளிய
# திருப்பள்ளியெழுச்சி

போற்றி!என் வாழ்முதலாகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
ஏற்றுயர் கொடியுடையாய்! எனை யுடையாய்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே. 01

அருணன் இந்திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின்மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே. 02

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ!நற் செறிகழல் தாளினை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்!எமக் கெளியாய்
எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே. 03

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினார் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியில் அஞ்சலிகூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டி ன்னருள்புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே. 04

பூதங்கள் தோற்றும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய்!எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியம்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தருளாயே. 05

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர்பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மணவாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருத் துறையுறை சிவபெருமானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தருளாயே. 06

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர்பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்!திருப் பெருந்துறை மன்னா!
எதுஎவைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தருளாயே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்!
ஆரமு தே!பள்ளி எழுந்தருளாயே. 08

விண்ணகத் தேவரும் நண்ணவும்மாட்டா
விழுப்பெரு ளே!உன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே!
வண்திருப் பெருந்துறை யாய்!வழி அடியோம்!
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே!கரும் பே!விரும் படியார்
எண்ணகத் தாய்!உல குக்குயிர் ஆனாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்தருளாயே. 09

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்!திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தே!பள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே என்தோழி பரிசேலோர் எம்பாவாய். 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையும் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோர் எம்பாவாய். 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதி ரெழுந்தென்
அத்தன்ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொண்டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையிற் துயிலேலோர் எம்பாவாய். 04

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குத் தங்கோனைப் பாடேலோர்எம்பாவாய். 06

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடைத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 07

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங்காளனையே பாடேலோர் எம்பாவாய். 08

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோ மேலோர் எம்பாவாய். 09

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்தோம் காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழைஆடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையர்க் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 15

முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்கணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமயங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்து ஆடேலோர்
எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய். 20


முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு 02 . 10 . 1939



உதிர்வு 08 . 11 . 2020

## அமரர். ஆறுமுகம் இராசநாயகம்

(ஓய்வு நிலை இலங்கை வங்கி முகாமையாளர்)

வாழ்ந்த நாட்களை வைர வரிகளில் எழுதி வைத்தீர்
வற்றாத நீரூற்றாய் வாழ்வின் உயர்வில் கலந்தீர்– வங்கியாளர்
சுற்றம் ஒன்றே உந்தன் உயிர் மூச்சாய் கொண்டீர்
சீற்றம் கொண்டு சிரித்த முகம் மாற்றிட அறிந்திடீர்
காற்றோடு கலந்து எங்கள் கண் மணிக்குள் நிறைந்தீர்
ஆற்றொனா துயரில் தங்கள் பிரிவால் வாடிடும் தம்
உற்றார் உறவினருடன் நாமும் கலந்து கண்கள் குளமாக
இலங்கை வங்கி, மக்கள் வங்கி என ஓய்வுநிலை
ஊழியர் நலன் காத்திடும் சங்கத்தின் செயலாளராய்
இற்றை நாள்வரை எமக்களித்த உன் அரிய சேவைதனை
என்றும் மனதிருத்தி உந்தன் ஆத்மா சாந்தி அடைய
ஈசன் திருப்பாதம் போற்றி வேண்டி நிற்போம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி மக்கள் குடும்ப உறுப்பினர்
உற்றார் உறவினர் நண்பர்களுடன் நாமும் கலந்து அன்னாரது
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!**

வடமாகாண இலங்கை வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவில் நீங்கா நன்றி



எமது குடும்பத்தலைவர் இயற்கை எய்திய செய்தி கேட்டு உடன் விரைந்து வந்து எமக்கு ஆறுதல் கூறி உதவி புரிந்தோர்கள் இறுதிக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்தோர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், மலர் வளையம் வைத்தோர், தந்தி, தொலைபேசி, முகநூல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோர்கள், இறுதிக் கிரியைகளில் உதவி புரிந்து ஒழுங்குகள் மேற்கொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், புலம்பெயர் உறவுகள் இறுதிக்கிரியை, அந்தியேட்டி, சபீண்டீகரண கிரியைகள் சிறப்புற நடாத்திய சிவாச்சாரியார்கள் இந் நிகழ்வுகளில் பங்குபற்றி ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித் தோர்கள், மேலும் அன்னாரின் நினைவாக இம் நூலினை தொகுப்பதற்கும், வடிவமைப்பதற்கு உதவியோருக்கும், அச்சமைத்த குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



நன்றியுடன்
குடும்பத்தினர்.

Guru Printers, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச விரு

*வினாசித்தம்பி கந்தையா
+
* தெய்வானைப்பிள்ளை

*ஆறுமுகம்

*வள்ளியம்மை

* **இராசநாயகம்**

*செல்வராணி
+
* நமசிவாயம்

சபாநாயகம்
+
*கோடீஸ்வரி

குலேந்திர
+
உருத்திர

**யோகலெட்சுமி**
(சுசீலாதேவி)

சற்குணலிங்கம்
+
கனகாம்பாள்

இந்திராதேவி
+
தெய்வேந்திரன்

சந்திராதேவி
+
* இராசதுரை

தயாபரன்
+
சர்மிளா

தனஞ்செயன்
இந்துஜா

தயானந்தி
+
திவாகரன்


நித்தியா
கார்த்திகா

பராபரன்
+
விஜயலதா

லக்ஷியா
சாகித்தியா
கார்த்தீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்ச விருட்சம்




* அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org